செ.வெ.எண்:93 நாள்: 02.02.2020

**புதுக்கோட்டை மாவட்டம், மேலத்தானியத்தில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டடத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், மேலத்தானியம் கிராமத்தில் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தினை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பெ.வே.சரவணன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (02.02.2020) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பொதுமக்கள் நோயற்ற நல்வாழ்வு வாழும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி சுகாதாரத்துறையில் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றையதினம் மேலத்தானியத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தில் மருத்துவர் அறை, செவிலியர் அறை, மகப்பேறு வார்டு மற்றும் மகப்பேறு அறை, அவசர சிகிச்சைப் பிரிவு, மருந்தகம், ஆய்வகம், ஊசிபோடும் அறை, கழிவறை உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் எழிலுற கட்டப்பட்டுள்ளது. இப்புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூலம் மேலத்தானியம் மற்றும் அதனை சுற்றியுள்ள 22 கிராம பொதுமக்கள் பயன்பெறுவார்கள்.

தமிழக அரசு சுகாதாரத்துறையில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் டாக்டர்.முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகையிலிருந்து கர்ப்பிணி பெண்களுக்கு உள்ள இரத்தசோகையை போக்கவும், பிறக்கும் குழந்தையின் எடை அளவை உயர்த்தவும் ரூ.4,000 மதிப்புள்ள இரும்புச்சத்து மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம் 25 தாய்மார்களுக்கு அம்மா தாய்சேய் நல ஊட்டசத்து பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பெட்டகம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 3 மற்றும் 5வது மாதங்களில் வழங்கப்பட்டு வருகிறது. இதில் சத்துபவுடர், இரும்புசத்து டானிக், பேரிச்சம் பழம், ஆவின் நெய், குடற்புழு நீக்க மாத்திரை, கோப்பை, துண்டு, பொருட்கள் உள்ள கூடை ஆகிய 8 பொருட்கள் அடங்கியுள்ளது. இதன் மூலம் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் கருவில் உள்ள குழந்தைகளின் உடல் நலம் மேம்படும். பிறக்கும் குழந்தையானது ஊட்டசத்தோடு ஆரோக்யமான குழந்தையை பெற்று எடுக்க முடியும்.

எனவே தமிழக அரசின் இதுபோன்ற சுகாதாரத்திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் பழனியாண்டி, பொதுசுகாதாரத் துணை இயக்குநர் மரு.அர்ஜுன்குமார், வட்டார மருத்துவ அலுவலர் மரு.அருள்மணி, உதவி திட்ட அலுவலர் மரு.குப்பம்மாள், மாவட்ட மலேரியா அலுவலர் மரு.சுப்பிரமணி, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**